முருகப்பெருமான் துணை

**மகான் பெரியாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.11.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. வள்ளலே வரம்பல தந்திடும்
வடிவேலனார் அம்சமாகவே
வல்லமைபட அவதாரமெடுத்து
வாழுகின்ற ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தேள்திங்கள்
அறிவிக்க தசதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10 ம் நாள், 26.11.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் பெரியாழ்வார் தானும்
வையகம் வளம்பெற உரைப்பேன்
சோரம்போகா ஜீவகாருண்யமெனும்
சீவன் மேலான தயவுப் பெருகினாலே
4. பெருகினாலே போதும் அப்பனே
பேதமிலா சமத்துவ நிலை கொண்ட
பேருலகமாக மாற்றம் காண்கும்
பெருமைமிக்க தரும வழிமுறை
5. வழிமுறை ஏற்கின்ற வண்ணம்
வருங்கால மக்கள் சரணாகதி
அழியாமை கொண்ட அரங்கனிடம்
அபயமென கண்டால் போதும்
6. போதுமப்பா ஆத்மா சுத்தி கண்டு
பொருளாசை மனமாயை எனும்
பூதலத்தை வதைக்கும் தீவழி விட்டு
புண்ணிய பலமே பெரிதென உணர நேரும்

7. நேருமை கொண்ட வண்ணம்
நிலவுலகுக்கு செயல்வடிவமதை
வருங்காலம் வளமாக்கும்படி
வழிகாட்டி செயல்படுத்த நேரும் என்பேன்

8. என்கவே சுத்த சன்மார்க்க
இணையிலா அரங்கன் நெறி
மண்ணுலகை மாற்றுகின்ற
மாதவ நெறியாக இருக்க

9. இருக்கவே எல்லோராலும் ஏற்பு
இயல்பாகி உலகினில் பரவ
வருத்தமின்றி சமூக வளர்ச்சி
வையகத்தில் சகோதரத்துவம் ஆகி

10. ஆகியே அனைவரும் சமம்
ஆறுமுகனார் ஆசி பெற்ற
அகிலம் வாழ் சேய்களென
அகத்தியர் குலமே நம் குலமென

11. குலமென ஒருகுடையின் கீழ்
குவலயம் தரும ஞானபாதை
கோலமதாய் அகலா வண்ணம்
குருபரன் ஆள ஞான ஆட்சிபெறும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–